DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 392/2025

Petitioner side Witness : PW1

| பெயர்: | கிருத்திகா | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | கார்த்திக் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/05/2026

(எதிரி ஆஜர் இல்லை. )

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை :**

1) நான் ஒட்டன்சத்திரம் தாலுகாவில் தும்பிச்சிம்பட்டிபுதுாரில் எனது அப்பா, அம்மா வீட்டில் எனது 9 வயது மகன் கவிஷ் உடன் குடியிருந்து வருகிறேன். எனக்கும், எனது கணவருக்கும் கடந்த 2015 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. கடந்த 2021 ஆம் ஆண்டு DVC No. 5/2021 என்ற மனுவில் எனது கணவரிடமிருந்து எனக்காகவும், எனது மைனர் மகனுக்காகவும் மாதம் ரூ.50,000/- இடைக்கால ஜீவனாம்சமாக கோரி இருந்தேன். அந்த மனுவின் மீது கடந்த 22.03.2024 ஆம் தேதி அன்று உத்தரவானது. அந்த உத்தரவில் எனக்கும், எனது மைனர் மகனுக்கும் மாதம் ரூ.15,000/- இடைக்கால ஜீவனாம்சமாக கடந்த 09.11.2023 ஆம் தேதியிலிருந்து உத்தரவிடப்பட்டது. இத்துடன் மைனர் மகன் கவிஷின் பள்ளிக் கட்டணத்தையும் எனது கணவர் செலுத்தும்படியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. மேற்படி கடந்த 03.06.2024 ஆம் தேதி ரூ.15,000/-மும், 19.06.2024 ஆம் தேதி ரூ.15,000/-மும், 25.07.2024 ஆம் தேதி ரூ.15,000/- மும், 12.02.2026 ஆம் தேதி ரூ.20,000/-மும், 05.03.2026 ஆம் தேதி அன்று ரூ.5,000/-மும், 09.04.2026 ஆம் தேதி ரூ.5,000- மும் ஆக மொத்தம் ரூ.75,000/- எனக்கும், எனது மைனர் மகனுக்கும் இடைக்கால ஜீவனாம்சமாக எனது கணவர் கொடுத்துள்ளார்.

2) கடந்த 09.11.2023 ஆம் தேதி முதல் 20.05.2026 ஆம் தேதி வரை இடைக்கால ஜீவனாம்சத்தை ரூ.15,000/- 31 மாதங்களுக்கு ரூ.4,65,000/- அதில் ரூ.75,000/- இடைக்கால ஜீவனாம்ச தொகையாக மாதம் மாதம் பிரித்து கொடுக்கப்பட்டது. மேற்படி நிலுவைத் தொகையான ரூ.3,90,000/-க்காக இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன். மேலும் எனது மைனர் மகனின் பள்ளிக் கட்டணம் 2025- 2026 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டு கட்டணம் எனது கணவரால் செலுத்தப்பட்டும் மூன்றாவது காலாண்டு கட்டணத்தை இன்னும்

செலுத்தாமல் இருந்து வருகிறார். அதே போல் 2026–2027 கல்வியாண்டின் முதல் காலாண்டு பள்ளிக்கட்டணம் கட்டப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.20 18:03:33 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 20/05/2026